DINAKARAN

PAGE NO: 07

14th JULY 2021

அந்தமான் நிகோபார், காரைக்காலில்

# நடப்பு கல்வியாண்டு முதல் புதிய எம்பிஏ படிப்புகள்

## புதுவை பல்கலை துணைவேந்தர் தகவல்



முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் குறித்த விவரக்குறிப்பேட்டினை புதுவை பல்கலைக் கழக துணை வேந்தர் குர்மீத் சிங் வெளியிட்டார்.

புதுச்சேரி, ஜூலை 14: புதுவை பல்கலைக்கழகத்தின் 2021 மற்றும் 2022ம் கல்வியாண்டிற்கான முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் குறித்த மாணவர்களுக்கான விவரக்குறிப்பேடு அறிமுக விழா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இதில் துணைவேந்தர் குர்மீத்சிங் கலந்து கொண்டு குறிப்பேட்டினை வெளியிட்டார். முதல் பிரதியை அந்தமான் நிகோபார்தீவு பல்கலைக்கழகமையத்தின் பொறுப்பு அதிகாரி ராஜ்குமார் பெற்றுக் கொண்டார். அப்போது பேசிய துணைவேந்தர் குர்மீத் சிங், உலகளவிலான தரவரிசை பட்டியலில் முன்னணியில் உள்ள 1000 பல்கலைக்கழகங்களில் சிறந்த உயர்கல்வி ஆராய்ச்சி நிறுவனமாக புதுவை பல்கலைக்கழகம் இருந்து வருகிறது. உலகத்தரத்திலான உயிர்தொழில் நுட்பம், வேதியியல், நுண்ணுயிரியல் மற்றும் பன்னாட்டு அளவிலான அறிவியல் ஆராய்ச்சிகள் பல்கலைக்கழகத்தில் நடந்து வருகிறது. இதில் பேராசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் உழைப்பால் புதுவைப் பல்கலைக்கழகம் உலகளவில் ஆய்வுத்துறையில் எதிர்காலத்தில் முன்னேறி இந்தியாவுக்கு பெருமை சேர்க்கும்.

பல்கலைக்கழக படிப்புகளை மேலும் விரிவுபடுத்தும் வகையிலும், பழங்குடியின மாணவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கி தருவதற்காக, இந்த கல்வியாண்டு முதல் அந்தமான் நிகோபார் பல்கலைக்கழக மையம் சார்பில் முதுநிலை வணிக மேலாண்மை மற்றும் பல்லுயிர் பிராணிகள் குறித்த பட்டயப் படிப்பும் புதியதாக தொடங்கப்பட்டுள்ளது. புதுச்சேரியை சேர்ந்த கிராமப்புற மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு காரைக்கால் பல்கலைக்கழகம் கல்வி மையம் சார்பில் முதுநிலை வணிக மேலாண்மை (எம்பிஏ) வகுப்புகள் தொடங்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். விழாவில் பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

DINAMANI

PAGE NO : 03

14th JULY 2021

# புதுவை மத்திய பல்கலை. காரைக்கால் மையத்தில் எம்.பி.ஏ. படிப்புகள் தொடக்கம்

புதுச்சேரி, ஜூலை 13: புதுவை மத்திய பல்கலைக்கழக காரைக்கால், அந்தமான் நிகோபார் மையங்களில் நிகழ் கல்வியாண்டு முதல் புதிதாக எம்.பி.ஏ. படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

புதுவை மத்தியப் பல்கலைக் கழகத்தின் 2021-22-ஆம் கல்வியாண்டு முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகள் குறித்த மாணவர்களுக்கான விவரக் குறிப்பேடு அறிமுக விழா பல்கலைக்கழக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதனை துணைவேந்தர் குர்மீத்சிங் வெளியிட, அந்தமான் நிகோபார் மைய பொறுப்பு அதிகாரி ராஜ்குமார் பெற்றுக் கொண்டார். அப்போது, துணைவேந்தர் குர்மீத்சிங் பேசியதாவது:

புதுவைப் பல்கலைக்கழகப் படிப்புகளை விரிவுபடுத்தும் வகையிலும், பழங்குடியின மாணவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தரும் வகையிலும் நிகழ் கல்வியாண்டு முதல் அந்தமான் நிகோபார் பல்கலைக்கழக மையம் சார்பில் முதுநிலை வணிக மேலாண்மை மற்றும் பல்லுயிர் பிராணிகள் குறித்த பட்டயப் படிப்பு புதிதாக தொடங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரியைச் சேர்ந்த கிராமப்புற மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு காரைக்கால் பல்கலைக்கழகம் கல்வி மையம் சார்பில் முதுநிலை வணிக மேலாண்மை (எம்.பி.ஏ) வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் திறன்களையும், அறிவாற்றலையும், வேலை வாய்ப்புகளையும், பன்னாட்டு உறவுகளையும் மேம்படுத்தும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்கலைக்கழக நவீன பாடப்பிரிவுகளில் சேர்ந்து மாணவர்கள் அனைவரும் பயன் பெற வேண்டும் என்றார் அவர். நிகழ்வில், பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

DINAMALAR

PAGE NO: 02

14th JULY 2021

# காரைக்கால் மையத்தில் எம்.பி.ஏ., பாடப்பிரிவு துவக்கம்

**புதுச்சேரி, ஜூலை 14–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின், அந்தமான் நிகோபார், காரைக்கால் மையங்களில் இந்தாண்டு முதல் எம்.பி.ஏ., பாடப் பிரிவு துவக்கப்படுகிறது என துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு;

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் 2021–22 ஆண்டிற்கான முதுநிலை, ஆராய்ச்சிப் படிப்புகள் குறித்த குறிப்பேட்டை துணைவேந்தர் குர்மீத்சிங் வெளியிட்டார்.

அந்தமான் நிக்கோபார் மைய பொறுப்பு அதிகாரி ராஜ்குமார் பெற்றுக் கொண்டார்.

துணைவேந்தர் பேசுகையில், 'பல்கலைக்கழகப் பாடப் பிரிவுகளை அதிகரிக்கும் வகையில், இந்த கல்வியாண்டு முதல், பல்கலைக்கழகத்தின் அந்தமான் நிகோபார் மையத்தில் முதுநிலை வணிக மேலாண்மை மற்றும் பல்லுயிர் குறித்த பட்டயப் படிப்பு புதிதாக துவக்கப் பட்டுள்ளது.

காரைக்கால் மையத்தில், முதுநிலை வணிக மேலாண்மை வகுப்பு (எம்.பி.ஏ.,) துவக்கப்பட உள்ளது என குறிப்பிட்டார்.

DINATHANTHI

PAGE NO: 08

14th JULY 2021

### புதுவை பல்கலைக்கழகம் சார்பில்

# காரைக்காலில் எம்.பி.ஏ. வகுப்புகள் தொடக்கம்

புதுச்சேரி, ஜூலை.14-

புதுவை பல்கலைக்கழகத்தின் 2021 மற்றும் 2022-ம் கல்வி ஆண்டிற்கான முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் குறித்த மாணவர்களுக்கான விவரக்குறிப்பேடு அறிமுக விழா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்தது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக துணை வேந்தர் குர்மீத்சிங் கலந்துகொண்டு குறிப்பேட்டை வெளியிட, அந்தமான் நிகோபர் தீவு பல்கலைக்கழக மையத்தின் பொறுப்பு அதிகாரி ராஜ்குமார் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் துணை வேந்தர் குர்மீத்சிங் பேசும்போது, இந்த கல்வியாண்டு முதல் அந்தமான் நிகோபர் பல்கலைக்கழக மையம் சார்பில் முதுநிலை வணிக மேலாண்மை மற்றும் பல்லுயிர் பிராணிகள் குறித்த பட்டய படிப்பும் புதிதாக தொடங்கப்பட்டுள்ளதாகவும், காரைக்கால் பல்கலைக்கழக கல்வி மையம் சார்பில் முதுநிலை வணிக மேலாண்மை (எம்.பி.ஏ.) வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.